**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 141/2003**
**நாள்.18.02.2026**
**பி.வா.சா.1- சுப்பிரமணி**
**த/பெ - ஆண்டவர்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை. என் மனைவி தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவி இருக்கிறார் என்றால் சரிதான். என் மனைவிக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அனுமதி உத்தரவு பெறவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி நல்ல உடல்நிலையுடன் உள்ளார் என்றால் சரியல்ல, அவருக்கு இடுப்புவலி மற்றும் கால்வலி உள்ளதால் வீட்டுவேலைகளை மட்டும் செய்துகொண்டு வீட்டில் உள்ளார்.

2. வீட்டுவேலைகளை செய்யக்கூடிய நிலையில் இருந்தால் நீதிமன்றத்தில் வந்த சாட்சியம் அளிக்க முடியும் என்றால் மருத்துவரின் ஆலோசனைப்படி இடுப்புவலி மற்றும் கால்வலி இருப்பதால் வீட்டுவேலைகளை மட்டும் செய்தால் போதும் என்பதால் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்க அவரால் முடியவில்லை.

3. நீதிமன்றத்தில் வந்து என் மனைவிக்கு சாட்சியம் அளிக்க முடியாத அளவிற்கு உடல்சரியில்லாமல் இருந்தால் அதற்குரிய மருத்துவ சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் மருத்துவ சான்றிதழ்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. என் மனைவி தற்போதும் நல்ல திடகாத்திரமான நிலையில் உள்ளார் என்றாலும், அவரை நீதிமன்றத்தில் விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக அவரை நீதிமன்றத்திற்கு விசாரிக்க வேண்டும் என்றே தவிர்த்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்ற விவரத்தை கூறவில்லை என்றாலும், என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்ற விவரத்தை கூறவில்லை என்றாலும் சரிதான்.

6. தாவா வழக்கு 3 சர்வே எண்களுக்கு கட்டுப்பட்ட சொத்துக்களுக்கும் மற்றும் ஒரு வீட்டிற்கும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. சர்வே எண்.1057/6க்கு கட்டுப்பட்ட நிலத்திற்கு மட்டும் எதிர்வாதம் செய்கிறேன் என்றாலும், மற்ற சர்வே எண்களுக்கு கட்டுப்பட்ட சொத்தை பொறுத்து தீர்ப்பாணை பிறப்பிப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றாலும் சரிதான்.

8. பிரதிவாதிகளில் 1,6,7,8 பிரதிவாதிகளை மட்டும் தெரியும், மற்றவர்களை தெரியாது. 1ம் பிரதிவாதி பொன்னம்மாள் தற்சமயம் உயிருடன் உள்ளார் என்றாலும், நல்ல உடல்நிலையுடன் இருக்கிறார் என்றாலும் சரிதான். 1,6,7,8 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து நாங்கள் வழக்கு நடத்துகிறோம் என்றால் சரிதான். அவர்களுக்கும் எனது வழக்கறிஞர் ஆஜராகியுள்ளாரா என்றால் ஆஜராகியுள்ளார்.

9. 1ம் பிரதிவாதியை விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் விசாரிக்க தேவையில்லை. அதேபோன்று 7,8 பிரதிவாதிகளை விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கிறோம்.

10. 7,8 பிரதிவாதிகளிடம் இருந்து தான் 25.04.2018ம் தேதி என் மனைவி கிரையம் வாங்கியுள்ளார் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் நான் கையொப்பம் செய்துள்ளேன். கையொப்பம் செய்த மற்ற நபர்களை பற்றி கிரைய ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும், தற்போது ஞாபகமில்லை

11. கிரையம் எவ்வளவு தொகைக்கு எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கு முன்போ பின்போ வேறு கிரைய ஆவணங்கள் 7,8 பிரதிவாதிகளால் பதிவு செய்யப்பட்டதா என்றால் நாங்கள் பதிவு செய்யும்போது 7,8 பிரதிவாதிகளால் வேறு ஆவணம் பதிவு செய்யப்படவில்லை, பி.வா.சா.ஆ.5 க்கு முன்போ பின்போ 7,8 பிரதிவாதிகளால் வேறு ஆவணம் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்பது குறித்து எனக்கு தெரியாது.

12. பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது பதிவு செய்யப்பட்டது என்றால் பதிவு செய்தபின் இவ்வழக்கு நிலுவையில் உள்ள விவரம்

தெரிய வந்தது. பி.வா.சா.ஆ.5 பதிவு செய்வதற்கு முன்பு தாவா வழக்கு நிலுையில் உள்ளதால் தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என்று வாதிகள் தரப்பில் செய்தித்தாளில் விளம்பரம் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது.

13. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என் மனைவிக்கு தனிப்பட்ட முறையில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை.

14. தாவா வழக்கு பற்றி எப்போது தெரியும் என்றால் 2018ம் ஆண்டு கிரையம் வாங்கிய பின்பு பி.வா.சா.ஆ.5க்கு கட்டுப்பட்ட நிலத்தில் உழவடை செய்யபோகும்போது செய்யக்கூடாது என்பதால் நீதிமன்றத்தை நாடினோம். அது சம்பந்தமாக மாண்பமை வேடசந்துார் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.188/2018 வழக்கை வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றோம் என்றால் சரிதான்.

15. மேற்படி இடைக்கால உத்தரவு மனுவில் இவ்வழக்கு நிலுையில் உள்ள விவரத்தை மறைத்து இடைக்கால உத்தரவு பெறப்பட்டது என்பதால் மேற்படி மாண்பமை சார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால் நிலையுறுத்துக்கட்டளை உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை.

16. 7,8 பிரதிவாதிகள் மீது தாவா வழக்கை மறைத்து கிரையம் செய்து கொடுத்தது சம்பந்தமாக பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் சரத்துகளின்படி நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை.

17. வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் நானும், என் மனைவியும், 7,8 பிரதிவாதிகளும் கூட்டுசேர்ந்துகொண்டு பொய்யான ஒரு கிரைய ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

18. 1ம் பிரதிவாதியையும், என் மனைவியையும் விசாரித்தால் உண்மை விவரங்கள் தெரிந்துவிடும் என்பதற்காக அவர்களை விசாரிப்பதில் இருந்து தவிர்த்து வருகிறோம் என்றால் சரியல்ல.

19. ஆதியில் வழக்கு சொத்துக்கள் சடையப்பகவுண்டருக்கும், அவரது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சடையப்பகவுண்டருக்கு திருமாயம்மாள் மற்றும் திருமாயி என்ற இரண்டு மனைவிகள் இருந்தனர் என்றால் சரிதான். முதல் மனைவி திருமாயம்மாளுக்கு சவடமுத்து என்ற மகன் இருந்தார் என்றால் சரிதான். சவடமுத்து 2,3 வாதிகளின் தாத்தா என்றால் சரிதான். இரண்டாவது மனைவி திருமாயிக்கு சத்தியமூர்த்தி மகன் என்றால் சரிதான்.

20. 1935ம் ஆண்டு யார் யாருக்கு இடையில் பாகவிஸ்தி ஏற்பட்டது என்பதை தெரிந்துகொண்டேன் என்றால் 1935ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகவிஸ்தி சத்தியமூர்த்தியின் தந்தைக்கும் மற்றும் அவரது சகோதரர்களுக்கும் இடையில் ஏற்பட்டது. சடையப்பகவுண்டரின் மூத்த தாரத்து மகனிற்கு 1935ம் ஆண்டு பாகவிஸ்தி படி பாகம் ஒதுக்கப்பட்டதா என்றால் பாகம் ஒதுக்கப்பட்டது.

21. மேற்படி 1935ம் ஆண்டு பாகவிஸ்தியில் சடையப்பகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட பாகமானது அவரது பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் பத்திரத்தை பார்த்து தெரிந்துகொண்டேன்.

22. சடையப்பகவுண்டர் இறப்பிற்கு பின்னர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது இரண்டு மனைவிகளின் பிள்ளைகளான சவடமுத்து மற்றும் சத்தியமூர்த்தி கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, தனித்தனியான அனுபவித்து வந்தார்கள்.

23. சடையப்பகவுண்டர் 1989-90 கால கட்டங்களில் இறந்துவிட்டார்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**